<u>விண்ணப்பத்தாரர்களுக்கான அறிவுரைகள்</u>

1. தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் காலியாக உள்ள ஒரு (1) அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு கீழ் கானும் தகுதியுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கல்வி தகுதி (8) எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் வயது வரம்பு 1.7.2022 அன்று அரசு விதிகளின்படி 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும் 37 வயது மிகாமல் இருக்க வேண்டும்.

2. விண்ணப்பங்கள் அதற்கான படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு, பதிவு தபால் மூலமாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. புகைப்படத்தை விண்ணப்பத்தில் அதற்கென குறிப்பிட்டுள்ள இடத்தில் ஒட்ட வேண்டும். புகைப்படத்தின் மேல்புறம் சுய சான்றொப்பமிட வேண்டும். புகைப்படத்தை விண்ணப்பத்தில் பின் அடித்து இணைக்கக்கூடாது.

4. உரிய முறையில் சுய சான்றொப்பமிடப்பட்ட தேவையான சான்றாவணங்களின் நகல்களை மட்டுமே விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படவேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றாவணங்கள் இணைக்கப்படக்கூடாது.

5. முழுவதுமாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சுயவிலாசமிட்ட ரூ.35/-க்கான அஞ்சல் வில்லைகள் ஒட்டப்பட்ட உரையுடன் இவ்வலுவலகத்திற்கு பதிவு தபால் மூலமாக 28.03.2022 மாலை 5.45 மணிக்குள் கிடைக்கத்தக்க அளவில் கீழே கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். 28.03.2022 அன்று மாலை 5.45 மணிக்கு மேல் வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். நேர்காணல் மூலமாக மேற்க்கண்ட காலியிடம் நிரப்பப்படும்.

6. முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய முகவரி:
தலைவர்,
மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்,
ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,
தூத்துக்குடி 628 003.

7. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தவறான தகவல்கள் கொண்டுள்ள விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

8. விண்ணப்பதாரர்களின் அடையாளம் மற்றும் இருப்பிட சான்றுக்காக கீழே குறிப்பிட்டுள்ள புகைப்படத்துடன் கூடிய ஆவணங்களில் ஏதேனும் ஒன்றின் புகைப்பட நகல் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும். (ஒட்டுநர் உரிமம், பான் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை,ஆதார் அட்டை)

9. விண்ணப்பதாரர்கள் முன்னுரிமை பெற்றவர் என்பதற்கான சான்றிதழ் நகல் விண்ணப்பத்துடன் கண்டிப்பாக இணைக்க வேண்டும்.

தலைவர்,
மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்,
தூத்துக்குடி.

# விண்ணப்ப படிவம்

1. பெயர் :

2. தகப்பனார்/கணவர் பெயர் :

3. வயது :

4. பிறந்த தேதி :

5. நிலையான முகவரி :

6. விண்ணப்பிக்கும் பதவி :

7. கல்வித் தகுதி :

8. வாகன ஓட்டுநர் போன்ற மற்ற தகுதிகள் :

9. இன சுழற்சி (BC,OC,MBC, SC,மற்றும் ST) :

10. எந்த அடிப்படையில் விண்ணப்பதாரர் முன்னுரிமை பெற்றவர் (Priority) :

11. விண்ணப்பதாரர் மீது முதல் தகவல் அறிக்கை (FIR) அல்லது குற்றவழக்கு நிலுவையில் உள்ளதா? ஆம் எனில் அதன் விபரங்கள் :

12. அலைபேசி எண் (Mobile No) :
13. மின்னஞ்சல் முகவரி (E-Mail ID) :
14. புலனம் எண் (Whatsapp No) :

நான்__________________________த/க/பெ_________________________ஆகிய என்னால் மேலே சொல்லப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மை என உறுதி கூறுகிறேன்.

நாள்:- மனுதாரரின் கையொப்பம்
இடம்:-

குறிப்பு:- விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, வயது, முகவரி மற்றும் சாதி சான்றிதழ் ஆகியவற்றிற்கான ஆவணங்களின் நகல்கள் சான்றொப்பம் செய்து அனுப்பப்படவேண்டும். விண்ணப்பங்கள் பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர் முன்னுரிமை பெற்றவர் என்பதற்கான சான்றிதழ் நகல் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும் இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால் முன்னுரிமை வழங்கப்படும்.